මැතිවරණ කොමිෂන් සභාව

தேர்தல்கள் ஆணைக்குழு

පොදු කාර්යාලය: 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்

ෆැක්ස්/தொலைநகல்: 011-2868426

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත,රාජගිරිය(10107)

தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம
சரண மாவத்தை, இராஜகிரிய(10107)

*web : www.elections.gov.lk*   *e-mail : info@elections.gov.lk*

මගේ අංකය :EC/ EDR/PE/2020/4
எனதுஇல.

ඔබේ අංකය :
உமதுஇல.

දිනය : 2020.03.03
திகதி.

(මෙම චක්‍රලේඛයේ සිංහල අනුවාදයසඳහා කරුණාකර පසුපිට බලන්න)

**ஆவணப்படுத்தப்பட்ட தபால்**

**சுற்றறிக்கை இலக்கம் 03**

**மிகமுக்கியம்**

**அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,**
**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்,**
**அனைத்து மாகாண சபை பிரதம செயலாளர்கள்,**
**தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர்,**
**அனைத்து மாவட்ட செயலாளர்கள்,**
**அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள் / மாகாணசபை அமைச்சுக்களின் செயலாளர்கள்,**
**அனைத்து மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,**
**அனைத்து திணைக்களங்களின் தலைவர்கள்,**
**அனைத்து அரசாங்க சேவை நியதிச்சட்ட சபைகளின் தவிசாளர்கள் / பொது முகாமையாளர்கள்**

<u>பாராளுமன்றத் தேர்தல்- 2020.04.25</u>

<u>அரசுக்கு மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் / நியதிச்சட்ட நிறுவனங்களுக்கு உரித்தான ஆதனங்களை தேர்தல் காலப்பகுதிக்குள் முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல் மற்றும் அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் / பதவி உயர்வு வழங்கல் / இடமாற்றம் செய்தல் என்பவற்றை மட்டுப்படுத்தல்</u>

பாராளுமன்றத் தேர்தல் 2020.04.25 ஆம் தேதி நடாத்தப்படவுள்ளது. அதற்கான வேட்புமனுக் கோரும் அறிவித்தல் 2020.03.02 ஆம் தேதி பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. அன்று முதல் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு முடிவடையும் வரையிலான காலப்பகுதி "தேர்தல் காலப்பகுதி" என இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 104ஓ ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் அரசியல் கட்சிகள் / சுயேச்சைக் குழுக்கள் /வேட்பாளர்கள் ஆகியோரை ஊக்குவிக்கும் விதத்திலோஇன்றேல்வேறு அரசியல் கட்சிகள் / சுயேச்சைக் குழுக்கள் / வேட்பாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்திலான பணிகளிலோ அரசாங்க ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ள வேண்டுமெனவும், அனைத்து மாவட்டங்களினதும் அரசாங்க அலுவலர்களின் / ஊழியர்களின் ஆட்சேர்ப்புக்கள் / பதவி உயர்வுகள் / இடமாற்றல்கள் ஆகிய விடயங்களை மட்டுப்படுத்த வேண்டுமெனவும் அரசாங்க ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களினதும் கவனத்தை ஈர்ப்பதற்காக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

02. அரசியலமைப்பின் 104ஆ(4)(அ) ஆம் உறுப்புரைக்கமைய ஏதேனும் தேர்தலொன்று நடைபெறவுள்ள காலப்பகுதிக்குள் அரசாங்கத்திற்கு அல்லது ஏதேனும் அரச கூட்டுத்தாபனம் ஒன்றிற்கு உரித்தான அசையும் அல்லது அசையா ஆதனமொன்றை ஏதேனும் ஓர் அரசியல் கட்சியை / சுயேச்சைக் குழுவை / வேட்பாளர் ஒருவரை ஊக்குவிக்கின்ற அல்லது தடுக்கின்ற பணிக்காக ஏதேனும் ஓர் அரசியல் கட்சி / ஒரு வேட்பாளர் அல்லது ஒரு சுயேச்சைக் குழு பயன்படுத்துவதைத் தடுக்கின்ற அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு. அரசியலமைப்பின் 104ஆ (4)(அ) ஆம் உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற இக்கட்டளைகளை

செயல்படுத்துவதற்கு அரசுக்குச் சொந்தமான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கடப்பாடுடையவர்களாக விளங்குகின்றனர். அதேபோன்று தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைத்து அரச அலுவலர்களும் இக்கட்டளைகளுக்கு அமைய நடந்து கொள்கின்றார்களென்பதற்கு நிறுவனத் தலைவர்கள் பொறுப்பாதல் வேண்டும்.. இக்கட்டளைகள் அனைத்து அரசாங்க அமைச்சுக்கள், ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரசாங்க வங்கிகள், அரசாங்க பல்கலைக் கழகங்கள் போன்ற அனைத்து நிறுவனங்களுக்கும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ள கம்பெனிகளுக்கும் வலுவுடையனவாயிருக்கும்,

03. (i) தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்காக அரசுக்கு சொந்தமான வாகனங்கள், ஹெலிகாப்டர்கள், விமானங்கள் என்பவற்றை தேர்தல் காலங்களின் போது பயன்படுத்துவதாக இவ்வாணைக் குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆதலால் அரசாங்க வாகனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் அவ்வாகனங்களை ஏதேனும் ஓர் அரசியல் கட்சியின் / சுயேச்சைக் குழுவின்/ வேட்பாளர் ஒருவரின் தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்காக பயன்படுத்தப்படாதவாறு தேர்தல் காலப்பகுதிக்குள் வாகன குழாத்தினைப் பேணுதல் மிகுந்த கவனத்துடன் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். அலுவலர்களுக்கு குறித்தொதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள வாகனங்கள் (Assigned vehicles), அரசாங்கத்துக்குச் சொந்தமான வாகனங்கள், வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வாகனங்கள் என்பனவும் இவற்றுள் அடங்குமென்பதை கருத்திலெடுத்தல் வேண்டும். இக்காலப்பகுதிக்குள் அலுவலர்களுக்கு குறித்தொதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள வாகனங்கள் (Assigned vehicles) தவிர்ந்த. முக்கியமாக குழாங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கான ஓட்டக் குறிப்புக்கள் முறையாக பேணப்பட வேண்டுமென்பதோடு, இந்த ஓட்டக் குறிப்புக்கள் பதவிநிலை அலுவலர் ஒருவரினால் அன்றாடம் பரிசீலிக்கப்பட்டு வாகனம் தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபடுத்தப்படவில்லை என்பது தொடர்பாக திருப்தி அடைதல் வேண்டும். கடமைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதாக போலிக் குறிப்புக்களை இட்டு அரசாங்க வாகனங்களை அரசியல் ஊக்குவிப்புப் பணிகளுக்காக பயன்படுத்தியுள்ள சந்தர்ப்பங்கள் கடந்த தேர்தல்களின்போது அறிக்கையிடப்பட்டுள்ளமையால் அத்தகைய போலியான விடயங்களுக்காக அரசாங்க வாகனங்களைப் பயன்படுத்தாதிருக்க பொறுப்பாதல் வேண்டும்.

(ii) கௌரவ ஜனாதிபதி அவர்களின் பாதுகாப்புப் பிரிவிற்குக் குறித்தொதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வாகனங்கள் தவிர்ந்தவேறெந்தவொரு வாகனத்தையும் மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் குறித்தொதுக்கப்படுகின்ற உரிய பதிவிலக்கமின்றி செலுத்த முடியாதாகையால், அமைச்சரவையின் அமைச்சர் ஒருவருக்கோ, பிரதி அமைச்சர் ஒருவருக்கோ, அவர்களின் பணிக் குழு அங்கத்தினர்களுக்கோ, வேறெவருக்குமோ உரிய பதிவிலக்கம் இன்றி அரசாங்கத்தின் அல்லது அரச நிறுவனங்களின் வாகனங்களைப் பயன்படுத்த முடியாது. ஆதலால் அனைத்து திணைக்களங்களின், அரச நிறுவனங்களின் வாகனங்கள் திருத்தக இலக்கங்களில் (போலி இலக்கங்களில்) ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படவில்லை என்பதை அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு உரித்தான வாகனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

04. அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசாங்கத்துக்கு சொந்தமான ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் போன்றனவும் அரச வளங்களாகும். ஆதலால் கட்டிடங்களை அரசியல் பிரச்சாரக் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றுக்குப் பயன்படுத்தவும் கூடாது. வழமையான காலப்பகுதிக்குள் எந்தவொரு கட்சிக்கும் / சுயேச்சைக் குழுவுக்கும் / வேட்பாளருக்கும் நிதிக் கொடுப்பனவு செய்து குறித்தொதுக்கிக் கொள்ள முடியுமான கட்டிடங்களையும், மண்டபங்களையும் தேர்தல் காலப்பகுதிக்குள் முறையான கட்டணத்தை அறவீடு செய்து ஏதேனும் ஓர் அரசியல் கட்சிக்கு / சுயேச்சைக் குழுவுக்கு / வேட்பாளருக்கு வித்தியாசமான முறையிலான கவனிப்பின்றி வழங்குவதற்கு இப்பணிப்புக்களினால் தடங்கலுண்டென கருதப்படலாகாது.. தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு அரசாங்க சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை விடுதிகள் என்பவற்றை கட்டணமின்றி வழங்குவது முற்றிலும் தடை என்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். மேலும் அனைத்து மாகாணங்களிலும் அமையப்பெற்றுள்ள அரசாங்கத்திற்கு அல்லது அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை விடுதிகள் என்பவற்றை எந்தவோர் அரசியல்வாதிக்கும், அலுவலருக்கும், வேறொரு நபருக்கும் முழுக்காலத்திற்குமென குறித்தொதுக்கிக் கொடுப்பதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். அதேபோன்று அத்தகைய இடங்களில் தரித்திருக்கின்ற ஆட்களுக்கு அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் பணிகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கக்கூடாது. அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் அவை அமையப்பெற்றுள்ள காணிகள் என்பவற்றில் அரசியல் கட்சிகளின் மற்றும்

வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பாரியளவிலான உருவப்படங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தவும் இடமளிக்கக்கூடாது

05. அரசாங்கம், மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள் என்பவற்றுக்குரித்தான விளையாட்டுத் திடல்கள் அல்லது வெற்று நிலங்கள் மற்றும் மண்டபங்கள் அல்லது அத்தகைய கட்டிடங்கள் என்பவற்றை ஒவ்வோர் அரசியல் கட்சி / சுயேச்சை குழு மற்றும் வேட்பாளர் ஊக்குவிப்பு பிரச்சாரக் கூட்டங்களுக்குக் குறித்தொதுக்கிக் கொடுக்கின்ற போது எந்தவொரு கட்சிக்கும், குழுவுக்கும், வேட்பாளருக்கும் முன்னுரிமையோ அல்லது குறைவான கவனிப்போ காட்டப்படத் தக்கவாறு குறித்தொதுக்கிக் கொடுக்கக்கூடாது. அத்தகைய இடங்களை குறித்தொதுக்கிக் கொடுத்தல் வெளிக்காட்டு தன்மையுடன் கூடியதாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய இடங்களை ஏனைய அரசியல் கட்சியொன்றிற்கு / சுயேச்சைக் குழுவொன்றிற்கு / வேட்பாளரொருவருக்குப் பெற்றுக்கொள்ள முடியாதவாறு எந்தவோர் அரசியல் கட்சிக்கும் / சுயேச்சைக் குழுவுக்கும் /வேட்பாளருக்கும் வேறொரு பணிக்காக தொடர்ச்சியாக குறித்தொதுக்கிக் கொடுக்கக்கூடாது.

06. எந்தவோர் அலுவலருக்கும் அல்லது ஊழியருக்கும் அரசியல் நடவடிக்கைகளுக்காக அரச ஆதனங்களை அதாவது வாகனங்கள், பிரச்சார உபகரணங்கள், அச்சு இயந்திரங்கள், நிழற்படப் பிரதி இயந்திரங்கள், ஊடக கருவிகள், தொலைபேசி வசதிகள், எழுதுபொருட்கள், சுற்றுலா விடுதிகள் போன்ற அல்லது வேறோர் அரசாங்க ஊழியரை பயன்படுத்தும் உரிமையோ அல்லது அரசாங்கத்துக்கு உரித்தான வேறு எதனையுமோ பயன்படுத்தும் உரிமையோ கிடையாது. அவ்வாறு பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

07. (i) தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்க நிதியைப் பயன்படுத்தி நடாத்தப்படுகின்ற பல்வேறு விதத்திலான அடிக்கல் நாட்டு வைபவங்கள், திறப்பு விழாக்கள், மக்கள் உரிமைக் கையளிப்புக்கள், நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள், களியாட்டங்கள் போன்ற வைபவங்களை அரசியல்வாதிகளின் பங்களிப்போடு மேற்கொள்கின்ற போது தேர்தலோடு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களும் அவர்களால் வெளிப்படுத்தப்படுவதற்கும் அதனூடாக தகாத அரசியல் லாபம் பெற்றுக் கொள்வதற்குமான சந்தர்ப்பங்கள் வாய்க்கின்றன. இத்தகைய வைபவங்களை நடாத்துவதனூடாக ஏதேனும் ஓர் அரசியல் கட்சியை / சுயேச்சைக் குழுவை / வேட்பாளரை ஊக்குவிப்பதாகவோ அல்லது வேறோர் அரசியல் கட்சியை / சுயேச்சைக் குழுவை / வேட்பாளரை பாதிப்புக்குட்படுத்துவதாகவோ முறைப்பாடு கிடைக்கக் கூடுமாதலால் இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய வைபவங்களை நடாத்துவதைத் தவிர்ந்து கொள்ளல் அவசியமென்பதனை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். ஏதேனும் ஒருவிதத்தில் வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்படுவதற்கு முன்னர், அத்தினத்திற்கு மிக அண்மித்த நாட்களில் இத்தகைய பணிகளுக்கான ஒழுங்கமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அத்தகைய வைபவங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்குட்பட்டே நடாத்தப்படல் வேண்டும். மேலும் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மிக அத்தியாவசிய நடமாடும் சேவைகளை இத்தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்துவதற்கு தேர்தலோடு தொடர்புடைய வேட்புமனுக் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட முன்னர் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பாக உடனடியாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அப்போது அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய அறிவுறுத்தல்கள்

(ii). தேர்தல் காலப்பகுதிக்குள் ஏதேனும் ஒருவிதத்தில் அரச நிதியைச் செலவிட்டு இத்தகைய வைபவங்கள் நடாத்தப்படுமிடத்து அத்தகைய சந்தர்ப்பமொன்றில் ஏதேனும் ஒரு கட்சி/குழு / வேட்பாளர் ஊக்குவிப்பு அல்லது பாதிப்பு நிகழுமிடத்து அது தொடர்பாக வைபவத்தை ஒழுங்கமைத்த அலுவலர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதே போன்று தேர்தல் காலப்பகுதிக்குள்நடாத்தப்படுகின்ற இத்தகைய வைபவங்கள் தொடர்பாக கண்காணித்து அறிக்கைகளைப் பேணும் பொருட்டு உரிய மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களை முன்கூட்டியே அறிவுறுத்த இப்பணிகளை ஒழுங்கமைக்கின்ற அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.. இத்தகைய வைபவமொன்றில் கட்சிகள் குழுக்கள் வேட்பாளர்கள் ஊக்குவிப்பு அல்லது பாதிப்பு நிகழ்வுடன் தொடர்புடைய வெளிப்படுத்துகைகளை வெளியிடல், செயற்பாடொன்றை ஆற்றுதல், கொடிகள் / பதாகைகள் / சுவரொட்டிகள் / பிரசுரங்கள் / அறிவித்தல்களின் காட்சிப்படுத்தல்கள் அல்லது பகிர்ந்தளிப்புக்கள் தடையென்பதோடு, அத்தகைய பணிகளைத் தவிர்ப்பதற்கு உரிய வைபவங்களை ஒழுங்கமைக்கின்ற அல்லது நிதியளிக்கின்ற அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் கடப்பாடுடையவர்களாக விளங்குகின்றார்கள்,

(iii) அதேபோன்று தேர்தல் காலப்பகுதிக்குள் ஏதேனும் ஒருவிதத்தில் அரசாங்க நிதியை செலவிட்டு இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவை நடாத்தப்படுமிடத்து, அத்தகைய சந்தர்ப்பமொன்றில் கட்சிகள் / குழுக்கள் / வேட்பாளர்கள் ஊக்குவிப்பு அல்லது பாதிப்பு நிகழுமாயின் அது தொடர்பாக குறித்த பணியை ஒழுங்கமைத்த அலுவலர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.. தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்தப்படுகின்ற இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தக கண்காட்சிகள், களியாட்டங்கள் தொடர்பாக கண்காணிப்பினை மேற்கொண்டு அறிக்கைகளைப் பேணும் பொருட்டு உரிய மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களை முன்கூட்டியே அறிவூட்ட இப்பணிகளை ஒழுங்கமைக்கின்ற அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் அல்லது பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகளுக்காக இம்மட்டுப்பாடுகள் பொருந்தா. இத்தகைய நடமாடும் சேவைகளை அலுவலர்களின் பங்களிப்போடு மாத்திரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இத்தால் வலியுறுத்தப்படுகின்றது. இத்தகைய எந்தவொரு நடமாடும் சேவை, வர்த்தகக் கண்காட்சி, களியாட்டம் என்பவற்றிலோ அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பத்திலோ கட்சிகள் / குழுக்கள் /வேட்பாளர்களை ஊக்குவிப்புக்காகக இல்லாவிடின் பாதிப்புக்காக எவ்விதத்திலேனும் வெளிப்படுத்துகையொன்றை வெளியிடுதல், செயலாற்றமொன்றை மேற்கொள்ளல், கொடிகள் / பதாகைகள் / சுவரொட்டிகள் / பிரசுரங்கள் /அறிவித்தல்களைக் காட்சிப்படுத்தல் அல்லது பகிர்ந்தளித்தல் முற்றிலும் தடையென்பதோடு, அத்தகைய நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கு உரிய பணியை ஒழுங்கமைக்கின்ற அல்லது நிதியளிக்கின்ற அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் கடப்பாடுடையவர்களாக விளங்குகின்றனர்,

(iv). இத்தேர்தல் காலப்பகுதிக்குள் காணிக் கச்சேரிகளை நடாத்துதல், அவசரமாக ஒழுங்கமைக்கப்பட்ட அரசாங்கக் காணிகளின் கையளிப்புக்கள், அரசாங்கக் காணிகளுக்கான உறுதிகளைக் கையளித்தல், பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கு அல்லது பயிர்ச் செய்கைகளுக்கான மானிய உதவிகள், உரவகைகள், விவசாய உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், சுயதொழிலுக்கான உபகரணங்கள், மிதி வண்டிகள், சூரிய ஒளி மின் விளக்குகள், வீடமைப்பு நிருமாணத்திற்கான கட்டிடப் பொருட்கள் என்பவற்றைப் பகிர்ந்தளிக்கும் கருத்திட்டங்கள் மற்றும் வீட்டுக் கடன் விநியோகங்கள், நஷ்ட ஈட்டுத் தொகைகளைப் பகிர்ந்தளித்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களும் இடைநிறுத்தப்படல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படுவதாக அரசாங்க அலுவலர்களினால் அறிவிக்கப்பட்டு, பட்டியல்கள் தயாரிக்கப்படுவது கூட இக்காலப் பகுதியில் மேற்கொள்ளப்படக் கூடாது. ஏனெனில் அத்தகைய பணிகளினூடாக வாக்காளர்களுக்கு உபசரணை வழங்கும் குற்றம் இழைக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதோடு, வேட்பாளர் ஊக்குவிப்பு நிகழ்வதாக முறைப்பாடுகளும் கிடைக்கப் பெறுகின்றமையாலாகும்,

(v) மேலும் தேர்தல் காலப்பகுதிக்குள் வீட்டுக் கடன் உதவிகளை வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல், கட்டிடப் பொருட்களை வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல் போன்ற நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படல் வேண்டும். கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஏற்கனவே திகதி நிர்ணயிக்கப்பட்டிருப்பின் அல்லது அவசர விசேட தேவைப்பாடொன்று ஏற்படின் அது தொடர்பாக எனக்கு அறிவித்தல் வேண்டும். அப்போது அது பற்றிய பொருத்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். அத்தகைய கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் கூட எந்தவோர் அரசியல் கட்சி / சுயேச்சைக் குழு /வேட்பாளருக்கு விசேட அனுகூலமொன்றை அல்லது பாதிப்பொன்றை ஏற்படுத்தாத விதத்திலும் அலுவலர்களின் பங்களிப்போடு மாத்திரமும் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதை கருத்திலெடுக்கவும்..

08. *(i)* *அனைத்து அரச அலுவலர்களினதும் ஆற்றல்கள், அறிவு மற்றும் அவர்களின் காலம் என்பன அரச வளங்களாகக் கருதப்படுகின்றன. அரசியல் உரிமை உள்ள அலுவலர்கள் கூட அலுவலக நேரத்திற்குள் அதாவது கடமைக்கு அறிக்கை இட்டுள்ள போது அல்லது கடமை விடுமுறை பெற்றுள்ள போது அலுவலகத்தின் உள்ளேயோ வெளியேயோ அரசியல் ஊக்குவிப்புப் பணிகளில் ஈடுபடக்கூடாது. அரசியல் உரிமை அற்ற அலுவலர்கள் லீவினைப் பெற்றுக் கொண்டேனும் அரசியல் பணிகளில் ஈடுபடக் கூடாது.*

*(ii) அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரசியல் உரிமைகளற்ற அரசாங்கத்தின் பதவி நிலை அலுவலர்கள், கூட்டுத்தாபனங்கள் / நியதிச்சட்ட சபைகளின் பதவி நிலை அலுவலர்கள், கிராம அலுவலர்கள், வன அலுவலர்கள் போன்ற சமாதான அலுவலர்கள் மற்றும் பாதுகாப்புத் துறைகளிலுள்ள அங்கத்தினர்கள் தமது அலுவலக நேரங்களுக்குள் மாத்திரமன்றி அலுவலக நேரங்களுக்குப் புறம்பாகவும் விடுமுறை தினங்களிலும் கூட மறைமுகமாகவோ நேரடியாகவோ எந்தவோர் அரசியல் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை அல்லது*

வேட்பாளர் ஒருவரை ஊக்குவிக்கும் விதத்தில் இன்றேல் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்திலான செயற்பாடுகளில் பங்குபற்றுவதையோ அல்லது அவற்றிற்கு ஆதரவு வழங்குவதையோ தவிர்ந்து கொள்ளல் வேண்டும், அதாவது அரசியல் உரிமைகளற்ற அனைத்து அலுவலர்களுக்கும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதியில்லையென்ற விதி மிகக்கடுமையாக வலுவாக்கம் செய்யப்படல் வேண்டும்.

*(iii).* அரசியல் உரிமைகளற்ற அரசாங்க அலுவலரொருவர் தமது சமூக வலைத்தளக் கணக்கொன்றை அல்லது வேறேதேனும் கணக்கொன்றைப் பயன்படுத்தி ஏதேனும் ஓர் அரசியல் கட்சியை அல்லது வேட்பாளரை ஊக்குவிக்கும் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் விதத்திலான ஏதேனுமொரு பிரச்சாரத்தை அல்லது வெளிப்படுத்துகையை மேற்கொள்ளல் குற்றமாகும்.. அரசியல் உரிமையுள்ள அரசாங்க அலுவலர் ஒருவர் கூட அப்பிரச்சாரங்களை அல்லது வெளிப்படுத்துகைகளை அரசாங்க வளங்களைப் பயன்படுத்தி தனது தனிப்பட்ட சமூக வலைத்தளக் கணக்கினூடாகவேனும் மேற்கொள்ளக் கூடாதென்பதோடு, வெறுப்புடன் கூடிய வெளிப்படுத்துகைகள் பிழையான தகவல்கள் மற்றும் தவறான தகவல்கள் என்பவற்றை வெளியிட அல்லது பகிரங்கப்படுத்த இடமளித்தல் குற்றமாகும்..

*(iv)* கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தவிசாளர்கள், பணிப்பாளர்கள் இத்தேர்தல் காலப்பகுதிக்குள் எந்தவோர் அரசியல் கட்சியை, சுயேச்சைக் குழுவை, வேட்பாளரை ஊக்குவிக்கின்ற அல்லது பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

09. (i) இந்தத் தேர்தலை இலக்காக வைத்து ஏதேனும் ஓர் அரசியல் கட்சியை / சுயேச்சைக் குழுவை / வேட்பாளர் ஒருவரை ஊக்குவிக்கின்ற அல்லது பாதிப்புக்குள்ளாக்குகின்ற விதத்திலான அரச நிறுவனங்களில் எந்தவொரு ஆட்சேர்ப்பையும் /நியமனத்தையும் / பதவி உயர்வையும் இடமாற்றம் செய்வதையும் தவிர்ந்து கொள்ள வேண்டுமென அறியத் தரப்படுகின்றது. பாராளுமன்றத் தேர்தல் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த அலுவலர்களின் ஆட்சேர்ப்பு / பதவி உயர்வுகள் /இடமாற்றல்கள் என்பவற்றோடு தொடர்புடைய நாடளாவிய ரீதியிலான வேலைத் திட்டமொன்றை எவ்வித கால ஒத்தி வைப்புமின்றி செயற்படுத்த வேண்டுமென அமைச்சின் செயலாளர் அல்லது நியமன அதிகாரி எதிர்பார்க்கின்றவிடத்து மற்றும் முழு நாட்டுக்கும் செல்லுபடியான விதத்தில் அரசாங்க சேவைக்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு உரித்தான நியமனங்களை முறையாக அரசியல் தலையீடுகளின்றி மேற்கொள்ள வேண்டுமென்பதோடு, அத்தகைய ஆட்சேர்ப்புக்கள் / பதவி உயர்வுகள் /இடமாற்றங்களுக்காகவும் ஆணைக்குழுவுக்கு உரிய விடயங்களை சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அதே போன்று ஒவ்வொரு மாகாண சபையில் அல்லது உள்ளூர் அதிகார சபையில் அல்லது ஏனைய அரச நிறுவனங்களில் பணியாள் குழுவினர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் / பதவி உயர்வு வழங்கல் / இடமாற்றம் செய்தல் என்பன வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட முன்னர் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகளின் போதும்கூட இடைநிறுத்தமேதுமின்றி செயற்படுத்தப்பட வேண்டுமாயின், அதுதொடர்பான அனைத்து விபரங்களையும் அதாவது செயன்முறை ஆரம்பிக்கப்பட்டவிதம், நியாயப்படுத்தல், உரிய அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல், விண்ணப்பங்களைக் கோருதல் என்பவற்றோடு தொடர்புடைய அனைத்து விடயங்களையும் அறிவித்து அனுமதியைக் கோருதல் வேண்டும். அப்போது அரசியல் தலையீடு ஏதுமின்றி முறையாக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே அனுமதி வழங்கப்படும்..

(ii) சுகநலப் பாதுகாப்பு, சுத்திகரிப்பு சேவைகளும் பேணுகை நடவடிக்கைகளும் மற்றும் அழுக்கு அகற்றல் போன்ற அத்தியாவசிய பணிகளின் தடங்கலைத் தவிர்ப்பதற்காகவும் அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்காகவும் பிரதேச ரீதியாக அல்லது மாகாணசபை சேவைக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்குக் கூட முழுமையான விபரங்களை அறிவித்து தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இவ்வனைத்து விடயங்களும் எந்தவோர் அரசியல் தலையீடுமின்றி வெளிக்காட்டு தன்மையுடன் கூடியதாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு, தகவல்களை அறியும் உரிமையின் கீழ் குறித்த அனைத்து விடயங்களையும் எந்தவொரு பிரசைக்கும் பெற்றுக்கொள்வதற்கு முடியுமெனவும், ஊடகங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் நேர் முரணான அரசியல் கட்சிகள் இத்தகைய விடயங்களின்பால் அக்கறை கொண்டுள்ளதையும் எப்பொழுதும் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

(iii) மேலும் பாராளுமன்ற தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் 2020.03.02 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளமையால் அத்திகதிக்கு முந்திய திகதியொன்றை இட்டு முற்றிகதிப்படுத்தும் வகையிலான நியமனக் கடிதங்களை / பதவி உயர்வுகள் மற்றும் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுவதாக ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளமையால் அவ்வகையிலான நடவடிக்கைகளை எடுத்தல் எவ்விதத்திலும் மேற்கொள்ளப்படக் கூடாதென்பது மேலும் வலியுறுத்தப்படுகின்றது.

(iv). தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்க அலுவலர்கள் வெளிநாடுகளுக்கு செல்லல் தேர்தல் கடமைகளுக்கு தடங்கலாக அமையக் கூடுமாதலால் பொதுவாக தேர்தல் காலப்பகுதிக்குள் அலுவலர்களின் வெளிநாட்டு பயணங்களுக்கான அனுமதி வழங்கப்பட வேண்டியது மிக இன்றியமையாத காரணங்களுக்கு மாத்திரமேயாகும்.. எனினும் தேர்தல் காலப்பகுதிக்குள் புலமைப் பரிசில், உயர் கல்வி, வைத்திய சிகிச்சை, சமயப் பிரயாணங்கள் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுப் பயணங்களை மட்டுப்படுத்த எதிர்பார்ப்பதில்லை. ஆதலால் அத்தகைய தேவைகளுக்காக அலுவலர்கள் வெளிநாடு செல்வதாயின் தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து முன்னனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு கிடையாது. எவ்வாறாயினும் அலுவலர்கள் கூட்டாக இக்காலப்பகுதியில் வெளிநாடு செல்வதாயின் அதற்காக முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். மிக அவசரமானதும் ஒத்திவைக்க முடியாததுமான காரணங்களுக்காக வெளிநாடு செல்ல வேண்டியேற்படுமிடத்து அது தொடர்பாக அனுமதி அளிப்பது பற்றி கருத்தில் கொள்ளப்படுமென்பதால் அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பான கோரிக்கைகளை முன்கூட்டியே சமர்ப்பித்தல் பொருத்தமாகும்.

(v). தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களதும் வழமையான இடமாற்றங்கள் 2020.03.02 முதல் தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்கள் கழியும் வரை அதாவது 2020.05.19 வரை இடை நிறுத்தப்படல் வேண்டும்.

(vi) ஏதேனும் விசேட அத்தியாவசிய விடயமொன்றுக்காக (அதாவது ஒழுக்காற்று நடவடிக்கைகள், அலுவலரின் கோரிக்கைக்கமைய அனுதாபத்துடன் கூடியதாக செயலாற்ற வேண்டி வருகின்றமை, ஏதேனுமொரு பாடசாலைக்கு இன்றியமையாத ஆசிரியர்களை வழங்குதல் போன்ற விடயங்கள் காரணமாக அலுவலர்கள், ஆசிரியர்கள், அதிபர்களை இடமாற்றம் செய்ய வேண்டியேற்படுமிடத்து, அவ்விடமாற்றங்கள் அரசியல் நிகழ்வுகள் காரணமாக மேற்கொள்ளப்படுகின்ற இடமாற்றங்களல்லவென உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமாயின் இன்றேல் அது தொடர்பாக முறைப்பாடுகள் / குற்றச்சாட்டுக்கள் கிடைக்கப் பெறவில்லையாயின் அவ்விடமாற்றங்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவை அறிவூட்டியதன் பின்னர் அதற்கான அனுமதியை வழங்க முடியும்.

10. அரசாங்க ஆதனங்கள் முக்கியமாக அரசாங்க நிறுவனங்கள், வாகனங்கள், பொருட்களாதியவைகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் அலுவலர்கள் தேர்தலோடு தொடர்புடைய கட்சிகள் / சுயேச்சைக் குழுக்கள் / வேட்பாளர்கள் ஊக்குவிப்பில் ஈடுபடுத்தப்படுவதற்காக எவ்விதத்திலும் அவகாசமளிக்கப்படக் கூடாது. தேர்தல் நடைபெறுகின்ற பிரதேசங்களின் அவசர கடமைப் பணிகள் அல்லது விசேட அபிவிருத்தித் திட்டங்களை ஆற்றுதல் ஆகிய விடயங்களை முன்வைத்து கட்சி / குழு / வேட்பாளர் ஊக்குவிப்பை (இன்றேல்பாதிப்பை) ஏற்படுத்தும் நோக்கோடு அரசாங்க / அரச நிறுவனங்களின் அலுவலர்களை மற்றும் அரசாங்க / அரச நிறுவனங்களுக்குரித்தான அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்களை வேறு அலுவலகங்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு இணைத்தல் அல்லது விடுவித்தல் போன்ற முறையற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எந்தவோர் அலுவலருக்கும் இடமளிக்கக்கூடாது,. அரசாங்கத்தின், மாகாணசபைகளின், உள்ளூராட்சி சபைகளின் அல்லது அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அரச வங்கிகள், நியதிச்சட்ட வேறு நிறுவனங்கள் அரசாங்க பல்கலைக்கழகங்கள் போன்ற எந்தவோர் அரச நிறுவனத்துக்குமுரிய ஊடகப் பிரிவுகளுக்கான அலுவலர்கள், வாகனங்கள், உபகரணங்கள் என்பவற்றை எந்தவொரு கட்சி /குழு / வேட்பாளரை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்தக்கூடாது. சாதாரண நிலைமையின் கீழ் ஏதேனும் ஓர் அரச நிறுவனத்துக்குரிய மேடைகள், சோடனைகள், உபகரணங்கள், வாகனங்கள், விமானங்கள். ஹெலிகொப்டர்கள் என்பன வாடகைக்கு வழங்கப்படுமாயின் தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய வாடகைக்கு வழங்குவதை கட்சிகள் /குழுக்களுக்காக பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களுடன் கூடியதாக வெளிக்காட்டுத் தன்மையுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்..

11. (i). தேர்தல் காலப்பகுதிக்குள் விசேட இன்றேல் துரித பல்வேறு கருத்திட்டங்கள், அபிவிருந்தி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றைத் தொடர்ச்சியாக செயல்படுத்துவது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். தேர்தல் காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படுகின்ற இத்தகைய தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றினூடாக கட்சிகள் / குழுக்கள் / வேட்பாளர் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் நிகழுமா என தேர்தல் ஆணைக்குழுவினால் கண்காணிக்கப்படும்.

(ii) அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவோ அல்லது ஏதேனும் வருடாந்த /ஞாபகார்த்த வைபவங்கள் என்பவறிற்காகவோ பிரச்சாரப் பணிகளை மேற்கொள்வதற்காக அரச நிதியைப் பயன்படுத்தி தொலைக்காட்சி, வானொலி, செய்திப் பத்திரிகைகள் ஆகிய ஊடகங்களினூடாக அறிவித்தல்களை ஒலி / ஒளிபரப்புதல் / பிரசுரித்தல் மூலம் அல்லது பிரச்சார அறிவித்தல் பலகைகளை பகிரங்க இடங்களில் காட்சிப்படுத்துவதனூடாக எந்தவொரு கட்சியையும், சுயேச்சைக் குழுவையும், வேட்பாளரையும் ஊக்குவிக்கின்ற பணிகளோ அல்லது பாதிப்புறச் செய்கின்ற விடயங்களோ மேற்கொள்ளப்படக் கூடாது..

12. அனைத்து தனியார் கேபிள் தொலைக்காட்சி வலையமைப்புகள், தனியார் இலத்திரனியல், அச்சு ஊடக நிறுவனங்கள், இணையத்தளங்கள், கையடக்க மற்றும் நிலையான தொலைபேசி சேவை வழங்குநர்கள் தேர்தல் காலப்பகுதிக்குள் தேர்தல் சட்டங்களை மீறாத விதத்திலும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக வழிகாட்டு நெறிகள், பணிப்புக்கள் மற்றும் அறிவுறுத்தல் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடந்து கொள்வதற்கு மேற்குறித்த தொடர்பாடல் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துகின்ற பொறுப்பை வகிக்கின்ற வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினதும், தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் / பணிப்பாளர் நாயகத்தினதும் பொறுப்பாதல் வேண்டும்.

13. கட்சிகள் / குழுக்கள் / வேட்பாளர் ஊக்குவிப்பு அல்லது பாதிப்புறச் செய்யும் விதத்தில் வீதி விளக்குக் கம்பங்கள், தொலைபேசிக் கம்பிக் கம்பங்கள் என்பவற்றில் பதாகைகள், சுவரொட்டிகள், கொடிகள் என்பவற்றின் காட்சிப்படுத்தல்கள், வேறு சோடனைகள் என்பவற்றை தவிர்க்கச் செய்தல் போன்றே பெருந்தெருக்கள் மீதும் அவற்றின் இருமருங்கிலுமுள்ள நடைமேடைகள் மீதும் கட்சிகள் / குழுக்கள் / வேட்பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காகவோ அல்லது பாதிப்புறச் செய்யும் நோக்கத்திற்காகவோ மை பூச்சுக்கள் ஊடாகவோ டிஜிட்டல் அல்லது இலத்திரனியல் அறிவித்தல் பலகைகள் போன்ற பிரச்சாரப் பணிகள் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கு உரிய அதிகார எல்லைகளில் அவ்வரச சொத்துக்களின் உரித்துரிமை அல்லது ஆளுகை உரித்தாகவுள்ள அரச நிறுவனங்களின் தலைவர்களின்/ மாகாண அல்லது பிரதேச பிரதானிகளின் மற்றும் மாநகர மேயர்கள் / தவிசாளர்கள் / மாநகர ஆணையாளர்கள் / செயலாளர்கள், ஒவ்வொரு பிரிவுகளினதும் பிரதானிகளின் பொறுப்பாகும்.

14. ஏதேனும் ஓர் அமைச்சு, திணைக்களம் அல்லது அரச நிறுவனத்தினால் தேர்தல் காலப்பகுதிக்கு முன்னர், நிருமாணிக்கப்பட்டிருந்த அல்லது காட்சிப் படுத்தப்பட்ட வண்ணமுள்ள கட்சிகள்/ குழுக்கள் / வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்குக் காரணமாகும் விதத்தில் பொது விடங்களில் காட்சிப்படுத்துகின்ற புகைப்படங்கள், பிரச்சாரப் பலகைகள், கொடிகள், பதாகைகள் மற்றும் சோடனைகள் போன்றவற்றை பொதுமக்களுக்கான காட்சிப்படுத்தல்களிலிருந்து அகற்றுவதற்கு அவ்வரச நிறுவனங்களின் பிரதானிகள் செயலாற்றுதல் வேண்டும். தமது உள்ளூர் அதிகார சபை எல்லைக்குள் பொது இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்சி/ குழு / வேட்பாளர் ஊக்குவிப்பு பிரச்சாரப் பலகைகள், கொடிகள், பதாகைகள் மற்றும் சோடனைகள் என்பவற்றை அகற்றுவதற்கு உள்ளூர் அதிகார சபைகளின் பிரதானிகள், அந்நிறுவனங்களின் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

15. தேர்தலொன்றின் போது கட்சிகள் / குழுக்கள்/ வேட்பாளர்களை ஊக்குவித்தல் அல்லது பாதிப்புறச் செய்யும் பணிகளுக்காக அரச வளங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கில் விடுக்கப்பட்டுள்ள பணிப்புகள் எத்தகைய தளர்வுக்கும் உட்படாமல் கடுமையாக செயற்படுத்தப்படல் வேண்டும், அந்தந்த அமைச்சின் கீழ் உள்ள அனைத்து திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அமைச்சுக்களின் செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேபோன்று அவ்வனைத்து நிறுவனங்களின் அலுவலர்கள் இவ்வறிவுறுத்தல்களுக்கும் கட்டளைகளுக்கும்

அமைவாக நடந்துகொள்வதாக அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் அவசியமாகும்.

16. இத்தேர்தலின் போது வேட்பாளர்களை அல்லது அவர்கள் போட்டியிட முன்வந்த அரசியல் கட்சியொன்றை ஊக்குவித்தல் அல்லது அத்தகைய ஏதேனும் அரசியல் கட்சியொன்றை / வேட்பாளரொருவரை / சுயேச்சைக் குழுவொன்றை பாதிப்புறச் செய்யும் நோக்கத்திற்காக அரச ஆதனங்களை பயன்படுத்துவதைத் தடுக்கும் விதத்தில் விடுக்கப்பட்டுள்ள இப்பணிப்புக்கள் எவ்வித தளர்வுக்குமுட்படாமல் கடுமையாக செயற்படுத்தப்படல் வேண்டும். மேலும் அந்தந்த அமைச்சுக்களின் கீழ் உள்ள அனைத்து திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குமாறு அமைச்சுக்களின் செயலாளர்களிடம் தயவன்புடன் கோரப்படுகின்றது. அதேபோன்று அவ்வனைத்து நிறுவனங்களின் அலுவலர்கள் இவ்வறிவுறுத்தல்களுக்கும் கட்டளைகளுக்கும் அமைவாக செயலாற்றுவதே அமைச்சுக்களின் செயலாளர்களும் நிறுவனங்களின் தலைவர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளல் அவசியமாகும்.

தேர்தலோடு தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கு. பாதுகாப்பதற்கு
17. தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு நல்குதல் உரிய சட்டத்தை வலுவாக்கம் செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அரச அதிகாரிகளினதும் பணியாகுமென அரசியலமைப்பின் 104ஆ.(2) ஆம் உறுப்புரையில் உள்ள குறிப்பீடு தொடர்பாக உங்களது விசேட கவனம் ஈர்க்கப்படல் இன்றியமையாததென தயவன்புடன் அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

(i). இச்சுற்றறிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்களையும்,
18. அமைச்சர்களின் பணியாட் குழுவினர்களையும் அறிவூட்டுவதும் அமைச்சின் செயலாளருக்குக் கையளிக்கப்படுவதோடு, மாகாண ஆளுநர்களை அறிவூட்டும் பொறுப்பு ஆளுநர்களின் செயலாளர்களை சாருமெனவும், பிரதம செயலாளரும் உரிய மாகாண சபைகளின் அமைச்சுக்களின் செயலாளர்களும் உரியவாறு ஆளுநர்களை அறிவூட்டுதல் வேண்டும்.

(ii) இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர் பதவிகள் இயங்குவது பாராளுமன்றம் கலைக்கப்படுவதைத் தொடர்ந்து முடிவுறுத்தப்படுவதனால் அப்பதவிகளை வகித்த அமைச்சர்களுக்கும் அவர்களின் பணியாட் குழுவினர்களுக்கும் எந்தவோர் அரச ஆதனத்தையும் பயன்படுத்துவதற்கான உரிமை இல்லையென்பதால் அவ்வாறு செய்வதைத் தடுத்தல் அமைச்சரவைக்கான அமைச்சின் செயலாளரின் பொறுப்பாகும்.

அதேபோன்று பொருத்தமானவாறு ஆணைக்குழுக்களின் செயலாளர்கள் அக்குழுக்களின் தவிசாளர்கள்
19. மற்றும் அங்கத்தவர்களை சுற்றறிக்கை தொடர்பாக அறிவூட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக, உங்களது அமைச்சின்/
20. திணைக்களத்தின் / நிறுவனத்தின் தலைமைக் கணக்கீட்டு அலுவலர் அல்லது கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் அரசுக்குச் சொந்தமான ஆதனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதைத் தடுப்பதும் உரிய அலுவலர்களின் பொறுப்பென்பதை ஈண்டு குறிப்பிடுகின்றேன்.

இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக வழமைபோல் அங்கீகரிக்கப்பட்ட அரசியல்
21. கட்சிகள். அனைத்து கண்காணிப்பு அமைப்புகள் என்பன அறிவூட்டப்படவுள்ளதோடு, தேர்தல் செயலகம் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் இயங்குகின்ற தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களில் இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களோடு தொடர்புடையதாக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் பற்றி விசாரிக்கப்படுமெனவும், தேர்தல் மனுக்களிலும் பாதிப்புக்குள்ளான தரப்பினரால் எடுக்கப்படுகின்ற ஏனைய நீதிமன்றச் செயன்முறைகளிலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுடன் இணங்கியொழுகாத செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்க நேரிடுமெனவும் மேலும் அறியத் தருகின்றேன்..

22. தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்புகளுக்கு இணங்கி ஒழுகுவதற்கு தவறுதல் குற்றமாகுமென்பதோடு, இலங்கை அரசியலமைப்பின் 104எஎ ஆம் உறுப்புரைக்கமைய அத்தகைய தவறொன்றிற்கு குற்றவாளியாகுமிடத்து, ஓர் இலட்சம் ரூபாவிற்குக் குறையாத தண்டப் பணத்திற்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாத சிறைத்தண்டனை ஒன்றிற்கு ஆளாவதற்கோ அல்லது தண்டப்பணம் அல்லது சிறைத்தண்டனை ஆகிய இரண்டு தண்டனைகளுக்கும் உள்ளாகவோ வேண்டி வருமென்பதை வலியுறுத்துகின்றேன்

23. இவ்வறிவுறுத்தல்கள் / கட்டளைகள் தேர்தல் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

24. இவ்வேற்பாடுகளில் அரசாங்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வோர் இடத்திலும் அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், அரச வங்கிகள், அரச பல்கலைக் கழகங்கள், அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ள கம்பெனிகள் ஆகிய அனைத்து நிறுவனங்களும், 50 சதவீதத்துக்கு மேற்பட்ட பங்குகள் அரசுக்கு அல்லது அரச கம்பெனிகளுக்கு உரித்தான நிறுவனங்களும் எனப் பொருள்படும்.

25. அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வோர் இடத்திலும் மேலே குறித்துக் காட்டப்பட்ட நிறுவனங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றவர்களுமான குடியரசிடமிருந்து வேதனமொன்றை அல்லது படியொன்றை பெறுகின்ற அனைவரும் எனப் பொருள்படும்.

**மஹிந்த தேசப்பிரிய**
தவிசாளர் / தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக.)

**பிரதிகள்:**

1. சனாதிபதி செயலாளர். -அறிந்துகொள்ள
2. பிரதமரின் செயலாளர் / அமைச்சரவையின் செயலாளர் - அறிந்துகொள்ள
3. கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வாளர் திணைக்களம் -அறிந்துகொள்ள
4. பணிப்பாளர் நாயகம் இலஞ்ச ஊழல் குற்றச்சார்த்துதல்கள் தொடர்பான புலனாய்வு ஆணைக்குழு - அறிந்துகொள்ள
5. அனைத்து அமைச்சுக்களினதும் நிருவாக விடயத்துக்குப் பொறுப்பான மேலதிக செயலாளர்கள். -அறிந்துகொள்ள
6. அனைத்து மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்கள்- இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல் மற்றும் கட்டளைகள் தொடர்பாக கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகள் பற்றி உடனடியாக எனக்கு அறிவிப்பதற்கும் அத்தகைய விடயங்களைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும்
7. முப்படைத் தளபதிகள் / சிவில் பாதுகாப்பு படையணியின் கட்டளை தளபதி -. அறிந்து கொள்வதற்கும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கும்
8. பொலிஸ் மா அதிபர் - அறிந்து கொள்வதற்கும் தேர்தல் சட்டங்களை வலுவாக்கம்அலுவலர்களை அறிவூட்டுவதற்கும்
9. தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் அனைத்து பதவி நிலை அலுவலர்கள் – அறிந்து கொள்வதற்கும் உரிய நடவடிக்கைகளுக்கும்
10. அனைத்து மாவட்ட பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையாளர்
    - அறிந்து கொள்வதற்கும் உங்களது மாவட்டத்தின் அனைத்து அரசாங்க நிறுவனங்களின் பிரதானிகள், அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் மாநகர ஆணையாளர்கள், நகர சபைகள், பிரதேச சபைகளின் செயலாளர்களுக்கும் இக்கடிதத்தின் ஒரு பிரதியை அனுப்பி வைப்பதற்கும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவிப்பதற்கும்
11. தேர்தல் பிணக்குகள் தீர்க்கும் பிரிவுடன் செயலாற்றுகின்ற சேகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் நிரந்தர